28th August 1970]

Petro - Chemical Dyes

*37. *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether there is any proposal to start factories for the manufacture of Petro-Chemical Dyes for use on Textiles at Karaikudi and Aruppukottai ; and

(*b*) if so, the details and the stage thereof ?

பெட்ரோ-இரசாயன சாயங்கள்

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) காரைக்குடி, அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில், பஞ்சாலைகள் பயனுக்காக பெட்ரோ-இரசாயன சாயங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை, அவை எந்த நிலையில் உள்ளன ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சா. கணேசன் : பெட்ரோல்-இரசாயன சாயங்கள் தயாரித்தல் என்று தமிழில் போடப்பட்டிருக்கிறது. பெட்ரோ-கெமிக்கல் என்பது தான் பெட்ரோல் ரசாயனம் என்ற பொருளில் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : நான் தமிழ் ஆராய்ச்சி செய்யவில்லை.

திரு. டி. சந்தோஷம் : இப்போது அத்தகைய தொழிற்சாலைகள் நிறுவும் உத்தேசமில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் கைத்தறி நெசவாளர்கள் ஏராளமாகத் துணி உற்பத்தியில் ஈடுபட்டிருப்பதாலும், துணி உற்பத்தி ஆலைகள் இருப்பதாலும், அங்கே இப்படிப்பட்ட ரசாயனச் சாயங்கள் வெகுவாகத் தேவைப்படும். இதை மனதில் கொண்டு அங்கே இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தமிழ் நாட்டில் நீண்ட நாட்களாக ரசாயனப் பொருள்களின் தேவை கவனிக்கப்படாமல் அவற்றின் உற்பத்தி குறைவாக இருந்தது. குறிப்பாக கைத்தறிக்கும் மற்ற டெக்ஸ்டைல்களுக்கும் இந்தச் சாயங்கள் தேவை என்ற காரணத்தை உணர்ந்து, இப்போது நமக்குத் தேவையான ரசாயனப் பொருள்களை எந்த அளவுக்கு நாமே உற்பத்தி செய்யலாம் என்று ஆராய்ச்சி

நடத்திணேம். **Hydro Sulphate, Hydros** என்ற பொருள் உடனடியாகத் தேவைப்படக்கூடியது. அதன் பற்றுக்குறை அதிகமாக இருக்கிறது. வெளிநாடுகளில் இரண்டு மூன்று நாடுகளில்தான் அது உற்பத்தியாகிறது. தமிழ் நாட்டில் அந்தத் தொழிற்சாலேயை ஆரம்பிக்க முடிவு செய்தோம். ஒரு கோடி ரூபாய்க்குத் திட்டமிட்டுத் தொடங்குவதற்கு முன் அனுமதி பெற்றிருக்கிரேம். அதை எந்த இடத்தில் வைக்கலாம் என்று ஆராயப்பட்டு வருகிறது. அப்படி ஆராய்ந்து தேர்ந்தெடுக்கிற இடத்தில் ஒன்று காரைக்குடிக்கு அருகில் இருக்கிறது. அங்கே தண்ணீர் கிடைக்கிறதா என்று பார்க்க வேண்டியிருக்கிறது. பொடாஷியம் குளோரைடு ரசாயனத் தொழிற்சாலே அவசியம். அந்தப் பொருள் தீக்குச்சிக்கு அதிகமாகத் தேவைப்படக் கூடியது. அந்தப் பொருள் ராமனுதபுரம் மாவட்டத்தில் ஏராளமாகத் தேவைப்படுவதால், கூட்டுறவுத் துறையில் அங்கே தொடங்கலாம் என்று முடிவு செய்தோம். அதற்கு இடம் மானுமதுரைக்கும் திருப்புவனத்திற்கும் பக்கத்தில் உள்ளது. அங்கே தேவையான தண்ணீர் கிடைக்கிறதா என்ற ஆராய்ச்சி இப்போது நடைபெறுகிறது.

Bus accident

*38. *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) the number of persons (1) dead and (2) injured in the recent bus accident in Kumuzhi-Cumbum Ghat Road on 5-10-1969 ;

(*b*) the amount of financial aid given to each family of the deceased and injured persons ;

(*c*) the amount given as aid by the owners of the bus which was involved in the accident ; and

(*d*) whether the Government have sanctioned any grant to the families of the deceased ?

பஸ் விபத்து

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விணக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 5—10—1969-ல் குமிழி-கம்பம் மலேச்சாலேயில் ஏற்பட்ட பஸ் விபத்தில் எத்தனே பேர் (1) இறந்தார்கள் (2) காயமுற்றனர் ?

(இ) இறந்தவர்களின் குடும்பத்தாருக்கும், காயமடைந்தவர்களின் குடும்பத்தாருக்கும் தலா எவ்வளவு நிதி உதவி வழங்கப்பட்டது ?

(உ) விபத்திற்குள்ளான பஸ் உரிமையாளர்கள் எவ்வளவு தொகை உதவியாக அளித்துள்ளார்கள் ?

(எ) அரசாங்கம் இறந்தவர்களின் குடும்பத்திற்கு மான்யம் வழங்கியுள்ளதா ?